**நவம்பர் – 03**

# TNPSC துளிகள்

- சுமார் 700 என்ற அபாயகரமானக் காற்றுத் தரக் குறியீட்டுடன் (AQI) லாகூர் நகரானது மீண்டும் உலகின் மிகவும் மாசுபட்ட நகரமாக மாறியுள்ளது.
- வாக் பக்ரி தேயிலைக் குழுமம் ஆனது, ஹுருன் இந்தியா நிறுவனத்தின் "இந்தியப் பொருளாதாரத்தில் சிறந்தப் பங்களிப்பினை ஆற்றியதற்கான தலைமுறை மரபு விருதை" பெற்றுள்ளது.
- மத்திய அரசானது, இந்தியத் தொலைபேசி எண்களாகக் குறிப்பிடப்பட்டு வரும் சர்வதேச அழைப்புகளை அடையாளம் கண்டு தடுக்கும் 'சர்வதேச மோசடி அழைப்புகளைத் தடுக்கும் அமைப்பினை' அறிமுகப்படுத்தியுள்ளது.
- சர்வதேசத் தகவல் தொடர்பு ஒன்றியத்தின் (ITU) 15வது Kaleidoscope Academic Conference எனும் மாநாடானது, "நிலையான உலகிற்கான புத்தாக்க மற்றும் எண்ணிம மாற்றம்" என்ற கருத்துருவின் கீழ் புது டெல்லியில் நடைபெற்றது.

# தேசியச் செய்திகள்

## ஆயுஷ்மான் வய வந்தனா அட்டை




- மத்திய அரசானது, 70 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட அனைத்து முதியோர்களுக்கும் அரசாங்கத்தின் முதன்மையான சுகாதாரக் காப்பீட்டுத் திட்டமான ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் பலன்கள் கிடைக்கப் பெறும் வகையில் அந்தத் திட்டத்தின் பயனாளர் வரம்பினை விரிவுபடுத்தியுள்ளது.

- இந்த முதியோர்களுக்கு ஆயுஷ்மான் வய வந்தனா அட்டை வழங்கப்படும்.
- அவர்களின் நிதி நிலை அல்லது வருமானத்தைப் பொருட்படுத்தாமல், 70 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட அனைவரும் இந்தத் திட்டத்தின் கீழ் பயன் பெற தகுதியுடையவர்கள் ஆவர்.
- இந்த விரிவாக்கப்பட்டத் திட்டத்தின் கீழ் ஆண்டிற்கு 5 லட்சம் ரூபாய் வரையிலான இலவச சுகாதாரக் காப்பீடு வழங்கப்படும்.
- ஆயுஷ்மான் வய வந்தனா அட்டை ஆனது, ஏழ்மை நிலையில் உள்ளவரோ அல்லது நடுத்தர வர்க்கத்தினரோ அல்லது மேல்நிலை வர்க்கத்தினரோ என எந்தவித வருமான வரம்புமின்றி அனைவருக்குமானதாகும்.
- PMJAY என்ற திட்டமானது, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை ஆகிய மருத்துவ சிகிச்சைகளுக்கு குடும்பத்திற்கு ஆண்டுக்கு 5 லட்சம் ரூபாய் வரையிலான சுகாதாரக் காப்பீட்டினை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவின் மக்கள்தொகையில் 40% பங்கினை கொண்ட அடிமட்ட நிலையில் உள்ள 12.34 கோடி குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 55 கோடி பயனாளிகளை இது உள்ளடக்கி உள்ளது.

## PR-126 நெல் ரகம்




- 2016 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட குறுகிய சாகுபடி கால நெல் வகை PR-126 ஆனது பஞ்சாப் பகுதியில் பரவலாகப் பயிரிடப்படுகிறது.
- குறுகிய வளர்ச்சி காலம், அதிக மகசூல், குறைந்தபட்சப் பூச்சிக் கொல்லி தெளிப்புத் தேவைகள் மற்றும் சிறந்த OTR ஆகியவற்றால் இந்த ரக நெல் ஆனது விவசாயிகள் இடையே பிரபலமடைந்தது.
- இது ஒரு ஏக்கருக்கு சராசரியாக 30 குவிண்டால்களுக்கு மேலான மகசூலினை தந்தது.
- 2023-24 மற்றும் 2024-25 ஆம் ஆண்டின் பயிர் பருவங்களில் இந்த மாநிலத்தில் அதிக நிலப்பரப்பிலான (தோராயமாக 32 லட்சம் ஹெக்டேர்) நெல் சாகுபடியானது மேற் கொள்ளப் பட்டுள்ளது.

- தற்போது அதன் குறைந்தப் பயன்படு பொருள் விளைவு விகிதம் (நெல் அரைவைக்குப் பின்னர் கிடைக்கும் அரிசியின் அளவு) காரணமாக குறைந்துள்ளது.

## CRS கைபேசி செயலி

- மத்திய அரசானது, "ஆளுகையில் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைப்பதற்காக" என்று குடிமைப் பதிவு அமைப்பு (CRS) கைபேசி செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தச் செயலியானது, குடிமக்கள் எந்த நேரத்திலும், எந்த இடத்திலிருந்தும், தங்கள் மாநிலத்தின் அலுவல் மொழியில் தங்கள் பிறப்பு மற்றும் இறப்புகளைத் தடையின்றி மற்றும் இடையூறின்றிப் பதிவு செய்ய வழிவகை செய்யும்.
- 2023 ஆம் ஆண்டு அக்டோபர் 01 ஆம் தேதி முதல் நாட்டில் பதிவாகும் அனைத்து பிறப்பு மற்றும் இறப்புகளும் மத்திய அரசின் dc.crsorgi.gov.in எனப்படுகின்ற இணைய தளம் மூலமாக எண்ணிம முறையில் பதிவு செய்யப்பட வேண்டும்.




## கருவிழிப் படல உறுப்பு மாற்றம்




- சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகம் ஆனது 1994 ஆம் ஆண்டு மனித உறுப்புகள் மற்றும் திசு மாற்று சட்டத்தினை (THOTA) திருத்தியமைக்க உள்ளது.
- குடும்பத்தினரின் அனுமதியின்றி இந்தியாவின் மருத்துவமனைகளில் உயிரிழக்கும் அனைத்து இந்திய நோயாளிகளிடமிருந்தும் கருவிழிப் படலத்தினை எடுப்பதை இது

எளிதாக்குகிறது.

- இந்தப் புதிய முயற்சியின் மூலம், மருத்துவமனைகளில் உயிரிழக்கும் அனைத்து குடி மக்களிடமிருந்தும் தமது குடும்பத்தாரின் அனுமதியின்றி கருவிழிப் படலத்தினை மீட்டெடுக்க முடியும்.
- அதாவது மருத்துவமனையில் உயிரிழக்கும் ஒவ்வொரு நபரும் கருவிழிப் படல தானம் செய்பவராகக் கருதப்படுவார்கள்.
- எனினும், கருவிழிப் படலத்தினை தானம் செய்ய விரும்பாதவர்கள் உயிருடன் இருக்கும் போது தானம் செய்ய விருப்பமில்லை என்று பதிவு செய்திருக்க வேண்டும்.
- தற்போது இந்தியாவில் நிகழும் உறுப்பு தானம் மூலமாக 50% தேவையை மட்டுமே பூர்த்தி செய்ய முடிகின்ற நிலை உள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## நச்சுத்தன்மை அல்லாத மூலக்கூறு அடிப்படையிலான புதிய சிகிச்சை




- புனேவில் உள்ள அகர்கர் ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிவியலாளர்கள், அல்சைமர் நோய்க்கு நன்கு சிகிச்சையளிப்பதற்கான புதிய நச்சுத்தன்மையற்ற மூலக்கூறுகளை உருவாக்கியுள்ளனர்.
- நரம்பு மண்டலச் சீரழிவு நோய்களுக்குச் சிகிச்சையளிப்பதில் பயனளிக்கக் கூடிய செயற்கை, கணக்கீட்டு மற்றும் பாதிப்பிடம் சார்ந்த ஆய்வுகளின் கலவையை இக்குழு பயன்படுத்தியது.
- அல்சைமர் என்பது சில ஹார்மோன்களின் சமநிலையின்மையால் ஏற்படுகிறது.
- இது மறதி நோயின் மிகவும் பொதுவான வடிவமாகும் மற்றும் உலகளவில் 55 மில்லியன் மக்களில் 60 முதல் 70 சதவிகிதம் பேரை பாதிக்கிறது.
- கொலினெஸ்டெரேஸ் நொதிகளை திறம்பட குறிவைத்து புதிதாக உருவாக்கப்பட்ட இந்த சில மூலக்கூறுகளானது நினைவாற்றலுக்கும் கற்றலுக்கும் மிக முக்கியமான அசிடைல்கொலின் கிடைக்கும் தன்மையினை மேம்படுத்துகிறது.

## புற்றுநோய் சிகிச்சைக்கான புதிய இலக்கு

- தற்போதுள்ள சிகிச்சைகளுக்கு எதிர்ப்புத் திறனை உருவாக்கும் தன்மை கொண்ட நோய்ப் பதிப்பு கொண்ட நோயாளிகளுக்குப் பயன் தரும் புற்றுநோய் சிகிச்சைக்கான நம்பிக்கைக்குரிய புதிய இலக்கை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- அறிவியலளர்கள், ஒரு புதிய கூட்டு சிகிச்சைக்கு அவசியமானதாக விளங்கக் கூடிய TDP1 எனப்படும் டிஎன்ஏ பழுதுபார்க்கும் நொதி மீது கவனம் செலுத்தினர்.
- தற்போதைய புற்றுநோய் மருந்துகளான கேம்ப்டோதெசின், டோபோடோகன் மற்றும்

இரினோடெகன் ஆகியவை டிஎன்ஏ பிரதியெடுப்பிற்கு வேண்டி மிகவும் முக்கியமான டோபோயிசோமரேஸ் 1 (Top1) என்ற நொதியைக் குறிவைக்கின்றன.

- எனினும், புற்றுநோய் செல்கள் பெரும்பாலும் இந்த மருந்துகளுக்கு எதிர்ப்புத் திறனை உருவாக்குகின்றன.
- ஆனால் இந்த பழுதுபார்க்கும் செயல்பாட்டில் சைக்ளின்-சார்ந்த கைனேஸ் 1 (CDK1) மற்றும் டைரோசில்-டிஎன்ஏ பாஸ்போடிஸ்டெரேஸ் 1 (TDP1) ஆகிய இரண்டு புரதங்கள் திறம்படச் செயல்படுகின்றன.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## பனியில்லா புஜி மலைச்சிகரம்




- நவம்பர் மாதம் வரை ஜப்பானின் புகழ்பெற்ற புஜி மலைச் சிகரமானது பனிப் படலம் எதுவும் இன்றி காணப்படவுள்ளது.
- இது சுமார் 130 ஆண்டுகளுக்கு முன்பு, இது குறித்தப் பதிவுகள் மேற்கொள்ளப்படத் தொடங்கியதிலிருந்து இந்த மலைச்சிகரம் பனிப் படலமின்றி காணப்பட்ட சமீபத்திய பதிவாக இந்த ஆண்டு உள்ளது.

- ஆனால் சமீபத்தியத் தேதிகள் ஆனது 1955 மற்றும் 2016 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் அக்டோபர் 26 ஆம் தேதியன்று பதிவான முந்தைய சாதனையை முறியடித்துள்ளன.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## கடல் போக்குவரத்து குறித்த மதிப்பாய்வு 2024




- ஐக்கிய நாடுகள் சபையின் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு அமைப்பானது (UNCTAD), 2024 ஆம் ஆண்டு கடல்சார் போக்குவரத்து மதிப்பாய்வு அறிக்கையினை வெளியிட்டு உள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் பதிவான சரிவிற்குப் பிறகு மீளத் தொடங்கிய கடல் சார் வர்த்தகம் ஆனது 2023 ஆம் ஆண்டில் 2.4% வளர்ச்சியடைந்து 12,292 மில்லியன் டன்களை எட்டியது.
- "2023 ஆம் ஆண்டில் வெறும் 0.3% மட்டுமே மிகவும் வளர்ச்சியடைந்த கொள்கலன் சார் வர்த்தகம் ஆனது, 2024 ஆம் ஆண்டில் 3.5% ஆக உயரும் என்று எதிர்பார்க்கப்படுவதாக இந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் கொள்கலன் கப்பல் போக்குவரத்து வர்த்தகம் ஆனது சுமார் 8.2% அதிகரித்துள்ளது.
- உலகளாவியக் கப்பல் போக்குவரத்து (டன்-மைல்கள்) செயல்பாடு ஆனது 2023 ஆம் ஆண்டில் 4.2% அதிகரித்ததோடு இது செலவினங்கள் மற்றும் உமிழ்வை அதிகரித்து உள்ளது.
- சூயஸ் மற்றும் பனாமா கால்வாய் போன்ற முக்கிய கடல்சார் தடைகள் காணப்படும் பகுதிகள் தீர்க்கப்படாத இடையூறுகளை எதிர்கொண்டன.

# மாநிலச் செய்திகள்

## அசாமின் போர்டோய்பாம்-பில்முக் பறவைகள் சரணாலயம்

- பறவைகள் சரணாலயத்தில் மேற்கொள்ளப்பட்ட சமீபத்தியக் கணக்கெடுப்பு ஆனது, பறவை இனங்களில் 70 சதவீதத்திற்கும் அதிகமான சரிவானது பதிவாகியுள்ளதாகக் குறிப்பிடுகின்றன.

- பதிவு செய்யப்பட்ட 167 இனங்களில் 47 மட்டுமே எஞ்சியுள்ளன.
- இந்தியாவில் சுமார் 1,377 பதிவு செய்யப்பட்ட உயிர் இனங்கள் உள்ள நிலையில் இந்த சரணாலயத்தில் மட்டும் 900க்கும் மேற்பட்ட பறவை இனங்கள் உள்ளன.
- அசாம் மாநிலமானது இரண்டு முக்கியப் பறவைகள் வலசை போகும் வழித் தடங்கள் உள்ள மத்திய ஆசியா மற்றும் கிழக்கு ஆசிய-ஆஸ்திரேலிய வழித்தடத்தில் அமைந்து உள்ளது.




## U-WIN இணைய தளம்



HOW DOES U-WIN WORK

- Children between 0-5 years will be registered on U-Win. Vaccines given at birth are also recorded.
- A list of children, who are scheduled to receive their vaccine doses, is generated through U-Win.
- The e-record helps children get vaccinated in different places without carrying a booklet. The portal sends SMS alerts to parents.
- The portal also records birth weight and details of physical deformities, if any. This can be used for other government programmes.

- ஹரியானாவின் நோய்த் தடுப்புச் சேவைகளைச் சீரமைப்பதற்காக U-WIN எனப்படும் எண்ணிம இணைய தளத்தினை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
- eVIN மற்றும் Co-WIN இயங்குதளத்தின் வெற்றிகரமான செயல்பாட்டினைத் தொடர்ந்து இந்த இணைய தளமானது அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.
- மாநிலத்தின் அனைவருக்குமான நோய்த் தடுப்பு திட்டத்திற்கு (UIP) உதவும் வகையில்

இது அனைத்துக் குடிமக்களுக்கும் அத்தியாவசிய சுகாதாரச் சேவைகளுக்கான பொது மற்றும் சமமான அணுகலை வழங்குகிறது.

# விளையாட்டு செய்திகள்

## 23 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்தப் போட்டி - 2024

- இந்தப் போட்டியில் இந்தியா ஒன்பது பதக்கங்களை வென்றுள்ளது.
- சிராக் சிக்கரா 23 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் என்றப் பெருமையினைப் பெற்றார்.
- பாரீசு ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற அமன் செஹ்ராவத்துக்குப் பிறகு, U23 சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கம் வென்ற இரண்டாவது இந்திய வீரர் என்றப் பெருமையினை இவர் பெற்றுள்ளார்.
- இதில் பங்கேற்பு அணிகளின் தரவரிசையில் 158 புள்ளிகளுடன் ஈரான் முதலிடத்திலும், அதனைத் தொடர்ந்து ஜப்பான் (102), அஜர்பைஜான் (100) மற்றும் ஜனிடா (82) ஆகிய நாடுகளும் உள்ளன.
- இந்திய மகளிர் மல்யுத்த அணியும் சிறப்பானப் பங்கேற்பினை வழங்கி, ஒரு வெள்ளி மற்றும் மூன்று வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.
- 59 கிலோ எடைப் பிரிவில் அஞ்சலி வெள்ளிப் பதக்கத்தினையும், நேஹா ஷர்மா (57 கிலோ எடைப் பிரிவு), ஷிக்சா (65 கிலோ எடைப் பிரிவு), மோனிகா (68 கிலோ எடைப் பிரிவு) ஆகியோர் தலா ஒரு வெண்கலப் பதக்கத்தினையும் வென்றனர்.



# முக்கிய தினங்கள்

## மாநிலங்கள் உருவாக்க தினம் 2024 - நவம்பர் 01

- நவம்பர் 01 ஆம் தேதியன்று ஆந்திரப் பிரதேசம், சத்தீஸ்கர், ஹரியானா, கர்நாடகா, கேரளா, மத்தியப் பிரதேசம், பஞ்சாப் மற்றும் தமிழ்நாடு ஆகிய எட்டு இந்திய மாநிலங்கள் தனது உருவாக்க தினத்தினைக் கொண்டாடின.
- தமிழ்நாடு மாநிலமானது, 1956 ஆம் ஆண்டு நவம்பர் 01 ஆம் தேதியன்று மெட்ராஸ் (மதராஸ்) மாநிலம் என்ற பெயரில் உருவாக்கப்பட்டது.
- இது பின்னர் 1967 ஆம் ஆண்டு ஜூலை 18 ஆம் தேதியன்று தமிழ்நாடு என மறு பெயரிடப் பட்டது.

- ஒருங்கிணைந்த ஆந்திரப் பிரதேசத்தில் இருந்து பிரிக்கப்பட்டு 1956 ஆம் ஆண்டு நவம்பர் 01 ஆம் தேதியன்று தனி ஆந்திரப் பிரதேச மாநிலமானது உருவாக்கப்பட்டது.
- சத்தீஸ்கர் மாநிலம் ஆனது 2000 ஆம் ஆண்டு நவம்பர் 01 ஆம் தேதியன்று உருவாக்கப் பட்டது.
- ஹரியானா மாநிலம் ஆனது 1956 ஆம் ஆண்டு நவம்பர் 01 ஆம் தேதியன்று கிழக்கு பஞ்சாப் மாநிலத்திலிருந்து மொழிவாரியாகப் பிரிக்கப்பட்டு ஒரு தனி மாநிலமாக உருவாக்கப்பட்டது.
- கர்நாடகாவானது, 1956 ஆம் ஆண்டு நவம்பர் 01 ஆம் தேதியன்று மைசூர் மாநிலமாக உருவாக்கப் பட்டது.
- பின்னர் 1973 ஆம் ஆண்டில் கர்நாடகா எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- மாநிலங்களின் மறுசீரமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து 1956 ஆம் ஆண்டு நவம்பர் 01 ஆம் தேதியன்று கேரளா உருவாக்கப்பட்டது.
- மாநிலங்களின் மறுசீரமைக்கப்பட்டதைத் தொடர்ந்து 1956 ஆம் ஆண்டு நவம்பர் 01 ஆம் தேதியன்று மத்தியப் பிரதேச மாநிலம் உருவாக்கப்பட்டது.
- பஞ்சாப் மறுசீரமைப்புச் சட்டத்தின் (1966) கீழ், பஞ்சாப் மாநிலமானது உருவானதைக் குறிக்கும் வகையில் நவம்பர் 01 ஆம் தேதியன்று மாநிலம் முழுவதும் பஞ்சாப் தினம் கொண்டாடப் படுகிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★